**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.163/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.8** |
| **Name** | **:** | திருமதி.நிர்மலா |
| **Father's Name** | **:** | சுரேஷ் |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

1 முதல் 10 எதிரிகள் ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 28-6-2023.**

முதல் விசாரணை -

நான் வயலாத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். சிப்காட்டில் வேலை செய்கிறேன். இறந்துபோன சுரேஷ் என்னுடைய கணவர். ஆஜர் எதிரிகளை தெரியும். என் கணவர் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். 20.1.2017 அன்று இரவு 9, 10 மணிக்குள் இருக்கும். நான் பிரசவமாகியிருந்ததால் என்னுடைய தாயார் வீட்டில் இருந்தேன்.

என்னுடைய கணவரின் அண்ணன் ரமேஷ் எனக்கு போன் மூலமாக பிரச்சனை என்று மட்டும் சொன்னார். வேறு எதுவும் சொல்லவில்லை. காரணம் நான் அப்போது அறுவைசிகிச்சையில் இருந்ததால் எனக்கு எதாவது

ஆகிவிடும் என்று சொல்லவில்லை. நான் பிரச்சனை என்றவுடன் வீட்டிற்கு வந்துவிட்டேன். வந்தபிறகு தான் இறந்தது பற்றி தெரியும்.

பொது இடத்தில் எதிரிகள் வீடு கட்ட முயன்றதை என் கணவர் தடுத்ததால் அதில் முன்விரோதம் கொண்டு எதிரிகள் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்து அடிக்கடி என் கணவரிடம் சண்டை போடுவார்கள். சண்டை போடும்போது என்றைக்காவது இருந்தாலும் வெட்டுவேன், அடிப்பேன் என்று பேசுவார்கள். எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து சண்டை போடுவார்கள். என் கணவர் மட்டும் தான்.

15.8.2016ஆம் அன்று சண்டை போட்டு என் கணவரின் மண்டையை கல்லால் உடைத்துவிட்டார்கள். அப்போது நான் கர்ப்பிணியாக இருந்தேன். என் மாமியாரையும் அடித்தார்கள். இதுசம்பந்தமாக தூசி காவல்நிலையத்தில் புகார் உள்ளது. இதுசம்பந்தமாக அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். அந்த வழக்கில் சரியாக நடவடிக்கை எடுக்காததால் தான் என் கணவருக்கு இப்படியாகிவிட்டது. எதிரிகள் வெட்டி போட்டதாக ரமேஷ் எனக்கு சொன்னார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

என்அம்மா ஊரில் இருந்து உத்திரமேரூர் எவ்வளவு தொலைவு என்றால் 25 கிலோமீட்டர் இருக்கும். என் கணவர் இறந்த தகவல் கேள்விப்பட்டு எப்போது என் கணவர் வீட்டிற்கு வந்தேன் என்றால் காலை 7 மணிக்கு வந்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்றைய தினம் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் என் கணவர் இறந்த மறுநாள் விசாரித்தார்கள். அதற்கு பின்னிட்டு என்னை எப்போது போலிசார்

விசாரணை செய்தார்கள் என்றால் விசாரித்தார்கள்.

போலிசார் என்னை விசாரித்தபோது பொது இடத்தில் எதிரிகள் வீடு கட்ட முயல்வதை என் கணவர் தடுத்ததால் அதில் முன்விரோதம் ஏற்பட்டு எதிரிகள் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்து என் கணவரிடம் சண்டைபோடுவார் என்ற சங்கதியை சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரிகள் சண்டைபோடும்போது என்றைக்காவது இருந்தாலும் வெட்டுவேன், அடிப்பேன் என்ற சங்கதியை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன்.

போலிசார் விசாரிக்கும்போது 15.8.2016 அன்று எதிரிகள் சண்டை போட்டு என் கணவர் மண்டையை உடைத்துவிட்டது சம்பந்தமாகவும், என் மாமியாரை அடித்தது சம்பந்தமாகவும் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றது குறித்து சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் எதுவும் நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றாலும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

என் கணவருக்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் இல்லை. என் கணவர் நடத்துனராக வேலை செய்வதால் வேலையின் காரணமாக 2,3 நாட்கள் கழித்து கூட வீட்டிற்கு வருவார் என்றால் சரி தான். அதனால் அவர் எப்போது பணிக்கு செல்வார், எப்போது வீட்டிற்கு வருவார் என்ற விவரம் எனக்கும் என் மாமியாருக்கும் மட்டும் தான் தெரியும் என்றால் சரி தான்.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு கூட என் கணவர் வேலைக்கு சென்றுவந்தார் என்றால் சரி தான். என்

கணவர் பணி செய்தது பூந்தமல்லி பணிமனை என்றால் சரி தான். சம்பவம் நடப்பதற்கு முன்பு முன்விரோதம் குறித்தும், தகராறு செய்தது குறித்தும் எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், சொல்லி கேள்விப்பட்டது தான் என்றால் எனக்கு நேரடியாக தெரியும். எனக்கு எதுவும் நேரடியாக தெரியாததால் தான் போலிசார் விசாரணையில் மேற்கண்ட சங்கதிகளை சொல்லவில்லை என்றால் சரியல்ல.

மேற்கண்ட குறுக்கு விசாரணை 7 முதல் 10 எதிரிகள் தரப்பில் ஏற்றுக்கொள்வதாக எடுத்துரைக்கப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.